உ
குருபாதம்
Regd. No. M. 4454

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

சுபானுஹு வைகாசிமீ — JUNE 1943.

7

FEB 194



இவ்வாதீன 24-வது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

26—6—43 அன்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளாட்சியேற்ற பத்தாவது ஆண்டு பூர்த்தியாகும் நன்னாளாகிறது. அன்றையதினத்தை விமரிசையாகக் கொண்டாட இராவ்பகதூர் திரு. N. R. சாமியப்ப முதலியார் அவர்களும், மாஹூர், ஸர் R. S. சர்மா, Kt. C. I. E. அவர்களும், மற்றும் பல அன்பர்களும் ஏற்பாடுசெய்து வருகிருர்கள். நிகழ்ச்சிக் குறிப்பு பின்னேவரும்.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன மடாலயத்திலும், ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களிலும் நடைபெற்ற சமயப் பிரசாரங்கள்.

தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு நிகழ்ந்த மகோற்சவத்தில் 18—5—43-ல் சென்னை கார்ப்பொரேஷன் உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் குருபக்தி என்பது பற்றியும், 19—5—43-ல் நாகை நர்ஷனல் உயர்தரப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் மெய்ப்பொருள் என்பது பற்றியும், பழனி சிவாகம பாடசாலைப் பேராசிரியர் சிவத்திரு, காசிவாசி. ஈசான சிவாசாரியார் அவர்கள் சிவவேடம் அரனுருவாம் என்பது பற்றியும், 20—5—43-ல் தருமபுர ஆதீனச் சைவப் பிரசாரகர் திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் திருக்கோவையார் என்பது பற்றியும், 21—5—43-ல் தருமபுர ஆதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர், சிவத்திரு. S. சாமிநாத சிவாசாரியார் அவர்கள் சிவதத்துவம் என்பது பற்றியும், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்தரப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் காஞ்சிப் புராணம் என்பது பற்றியும், 22—5—43-ல் தஞ்சை தூயபேதுரு உயர்தரப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆலய வழிபாடு என்பது பற்றியும் விரிவுரைகளாற்றினார்கள்.

23—5—43 எட்டாந் திருநாளன்று காலை 10-மணி முதல் தருமபுர ஆதீன நாதஸ்வர வித்வான், T. P. சுப்பிரமணியப் பிள்ளை தம்புராசுதியுடன் நாதஸ்வரக் கச்சேரியும், மாலை 6-மணி முதல் இசையரசு, தேவாரமணி, திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் பக்கவாத்தியங்களுடன் தமிழிசைக் கச்சேரியும் நிகழ்த்தினார்கள்.

ஆதீன மடாலயஸ்தாபகர் ஸ்ரீமத் குருஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாள் 25—5—43 அன்று குட்வாயில் போர்டு உயர்தரப்



உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடோர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.

மலர் 2	சுபானு ௵ வைகாசி ௴ JUNE 1943	இதழ் 7

இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.

உள்ளுறை

பக்கம்

1. சிவாகம சீலம். 231

2. திருத்தாண்டகவுரை—
ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள் அவர்கள். 235

3. **அற்புதத்திருவந்தாதி—**
வித்துவான், திரு. S. தண்டபாணி தேசிகர் அவர்கள், தமிழாசிரியர், போர்டு உயர்தரப்பள்ளி, திருவாரூர். 242

4. **பெரியபுராணத் திருப்பாட்டின் பேருரை—**
வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, அவர்கள், தமிழாசிரியர், அர்ச் இராயப்பர் உயர்நிலைப்பள்ளி, தஞ்சை. 249

5. **சைவத்திருமுறைகள்—**
வித்துவான். திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், சென்னை. 255

6. **திருவுந்தியார் உரைநடை—**
திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T., அவர்கள், கணித ஆசிரியர், பச்சையப்பன் உயர்தரப்பள்ளி, காஞ்சிபுரம். 259

7. **குருபூசை விழாவும் சித்தியார் வகுப்பும்—**
வித்துவான், திரு. வை. மு. சண்முகதேசிகர் அவர்கள், தமிழாசிரியர், நாகை நாஷனல் உயர்நிலைப்பள்ளி, நாகை. 262

8. **Pauranic Rudra & Vedic Rudra—**
Reprint from The Hindu, 18-4-43. 268

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

சிவாகமசீலம்

(199-ம் பக்கத்தொடர்ச்சி.)

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.

என, மேற்கூறிய வைகறைச் சீலங்களுள் எல்லார்க்கும் பொதுவாகிய சிலவற்றைச் சங்கத்தமிழ்நூல்களுங் கூறுதல் காண்க. அப்பாடல்களுக்குச் சைவாகமசீல விதிகட்கு மாறின்றி உரைசெய்து கொள்ளல் சைவர் கடனும்.

இனி அவ்வைகறைச் சிவத்தியானத்தின் பின் செய்யத்தக்கது ஆவசியகம் என்பதாம். அச்சொல் இடக்கரடக்கல்.

निस्सृत्य शयनस्थाना दावश्य करणं कुरु

துயிலிடத்தினின்றும் நீங்கிச் சென்று ஆவசியகத்தைச் செய்க என்பது சிவாகமவிதி. ஆவசியகம் என்பது

மலத்துக்குப் பெயரென்ப. மலசலநீக்கஞ் செய்தல, சௌசம் (தூய்மை) செய்தல், தந்தசுத்தி செய்தல் (பற்றுலக்கல்), சுத்தாசமனஞ்செய்தல் முதலியவற்றின் விதிகள் **நித்திய கருமநெறி**, சைவவினைவிடை முதலிய நூல்களிற் கண்டுகொள்க. காலையிற் செய்யற்பாலனவாய நாட்கடன்கள் அனைத்தினுக்கும் இன்றியமையாது முதலிற் செய்யற்பாலது உடலின் உள்ளும் புறம்பும் உளவாகும் அழுக்குநீக்கிப் புனிதஞ் செய்தலேயாம். அதுசெய்யும்முறை இக்காலத்துச் சுகாதாரமுறையினும் சிவாகமங் கூறும் முறை மிகவுஞ் சிறந்தமுறையாம். விதிப்படி எடுக்கப்பட்ட மண்ணும் நீருங் கொண்டு புனிதஞ் செய்தலே நலந்தரும். ஆவசியகம் நீக்கிச் சௌசஞ் செய்தபின் சுத்தாசமனஞ் செய்யற்பாற்று. அது முன்னர்க் கூறப்படும். அடுக்கச் செய்யற்பாலது பல் துலக்குதல். ஆல், அரசு, நெல்லி, கைவிரல், ஆவிரை, செங்கல், சாம்பல், மணல் முதலிய விலக்கப்பட்ட கருவிகளைக் கொண்டு தந்தசுத்தி செய்தால் பல்நோயுண்டாகும். தவம் நீங்கும். மருது குமிழ் புன்கு நொச்சி முதலியவற்றின் கொம்பு கொண்டு பல்துலக்கின் பல் இறுகும். தவமும் உளதாம். ஞாயிறு தோன்றுமுன் பல் துலக்குதல் வேண்டும். தோன்றியபின் பல் துலக்கின் அன்று செய்யும் நற்கருமங்களும், மந்திரங்களும் பயன்றராவாம். ஆதலின் அது தோன்றுமுன் பல் துலக்குதலே நலந்தரும்.

> நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
> தானறிய மாற்றாற் றொழுதெழுக.

என்றார் பெருவாயின் முள்ளியார். ஞாயிறு தோன்றியது முதல் மறுநாள் அது தோன்றுமளவு முள்ளகாலம் ஒருநாள். அந்த நாள் அந்தமு (முடிவு)றுங் காலமாகிய வைகறை **நாளந்தி** எனப்படும். கோல்—பற்கொம்பு, தின்று—என்பது மென்று பற்றுடைத்தலை யுணர்த்திற்று.

நீராடல்

இனி ஸ்நானம் எனப்படும் நீராடல் கூறற்பாற்று.

தேவர் வழிபாடு தீக்கனு வாலாமை
உண்டது கான்றன் மயிர்களைத லூண்பொழுது
வைகு துயிலோ டிணைவிழைச்சுக் கீழ்மக்கள்
மெய்யுற லேனை மயலுற லீரைந்தும்
ஐயுறு தாடுக நீர்.

தெய்வவழி பாட்டினும், தீக்கனைக் கண்டபோதும், ஆசௌசத்தினும், உண்டது கான்ற போதும், மயிர் களைந்தபோதும், உண்ணும் போதும், நெடிது துயின்ற போதும், இணைவிழைச்செய்திய போதும், கீழ்மக்கள் உடம்பு தீண்டிய போதும், மலசலங்கழித்த போதும் ஐயுறுமல் நீராடுக என்றார் ஆசாரக்கோவை நூலுடை யார்.

ஸ்நானம் வாருணம், ஆக்நேயம், மாந்திரம், மானசம், வாயவ்வியம், மாகேந்திரம், கௌரவம், கோவாலம் என எண்வகைப்படும். அவைகளுள் வாரு ணம், ஆக்நேயம் என்னும் இரண்டும் முதன்மை யானவை. வாருணம்—நீரில் மூழ்குதல். ஆக்நேயம்—சிவ மந்திரங் கொண்டு திருநீற்றை விதிப்படி உத்தூளன மாகப் பூசுதல். சைவர்கள் எந்த நற்செயல்களையும் சிவசிந்தனையோடு செய்தல் வேண்டும். அந்நினை வின்றிச் செய்யும் நல்வினைகள் குறித்த பயனைத் தரமாட்டா.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குமரித்துறை யாடிலென்
ஒங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீசனெனுதவர்க் கில்லையே.

என்னுந் தேவாரத் திருப்பாடலும் சிவசிந்தனை யின்றி நீராடல் முதலியன பயன்றரா என்பதனை வலியுறுத்தி உபதேசித்தல் காண்க. ஸ்நானம் செய்யு

முன் புனிதமான மிருத்திகை (மண்) எடுத்து உரிய மந்திரங்கொண்டு ஆராய்ந்து தூய்தாக்கி வைத்துக் கொண்டு, ஆசமன பிராணாயாம நியாசங்கள் செய்து சங்கற்பஞ் செய்தல் வேண்டும்.

(வரும்)

ஆயுட் சந்தா

நமது "ஞானசம்பந்தம்" சைவ சித்தாந்தத் திருமுறை விளக்க மலராகத் திகழ்தல் யாவரும் நன்கு அறிந்ததே. அது எங்கும் பரவவேண்டும் என்னும் பெருவிருப்பாலேயே அதிக விலை கொடுத்தாலும் காகிதம் கிடைப்பதரிதாகவுள்ள இக்காலத்தும் இதன் சந்தாவை, உயர்த்தாமல் ஏற்பட்ட ஒரு சிறு தொகை அளவிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

இப்பொழுது இதன் அருமையை உணர்ந்த அன்பர்கள் பலரும், இப்பத்திரிகையில் நிலைத்ததொடர்புடையவர்களாக இருக்கக்கருதி ஆண்டு உறுப்பினர்களாக இருப்பதைவிட ஆயுட் சந்தாதாரராகச் சேரப் பெரிதும் விழைகின்றனர். அதற்கிணங்கி அவ்விதம் செய்ய விரும்புவோர்களுக்கு ஆயுட் சந்தாவை ரூ. 100/- ஆக வைத்திருக்கின்றோம். அவ்விதம் செய்ய விருப்பமுள்ள சைவசீலர்களின் அருஞ்செயல் என்றும் சைவ உலகு பாராட்டக் கடமையுடைத்து.

உ

குருபாதம்

திருத்தாண்டகவுரை

[ஸ்ரீ செப்பறைச் சுவாமிகள்]

திருச்சிற்றம்பலம்

"முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாடன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே."

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

(இ-ள்) நங்கை முதற்கண் தலைவனை உத்தேச முறை பற்றி உணர்ந்தனள். அங்ஙனம் அதனை உணர்தலான் அவனுக்கு உளதாய இலக்கணம் இவையென இடைவாய் உணர்ந்தாள். அதனானே அதனைப் பரீக்ஷித் துணர்ந்தனள். அதனானே உலகப்பற்றுப் போகலான் அவன்கட் பேரன்புடையளாயினாள். அதனானே மாயையோடு காரணக்கடவுள் வசப்படா தொழிந்தனள். அதனானே உலகொழுக்கிறந்தனள். அதனானே தன் பணிநீத்தனள். அதனானே சீவத்துவம் நீங்கிச் சிவத்துவமுடையாளாயினாள். அதனானே இனி அத்தலைவன் றாளைத் தலைக்கூடுத லொருதலை யென்பதாம்.

நாமம்=பெயர்மாத்திரையான் எடுத்துவழங்குதலாய உத்தேசமுறை. மூர்த்தி யவனுக்கு என்னும் குவ்வுருபு விகாரத்தாற் றொக்கது. இருத்தல்—உளதாதல். நான்கிடத்தும் அவனெனவருதலின் ஆண்டிடைப்பட்டு நின்றதாய மூர்த்தி இடைநிலைத்தீபம். கேட்டல்—முன்னையது ஓதல். பின்னையது சிந்தித்தல். ஏனையது

—இயற்பெயர். முன்னும் பின்னும் 'முன்னம்' 'பின்னை' என வருதலின், இடையது இடைவாய் என்பது அருவித் துரைக்கப்பட்டது. நாமங் கேட்டாள் அது கேட்டாள், என எடுத்துக்கொண்டுரைக்க. முன் வருவனவற்றிற் கெல்லாம் இஃதொக்கும். பெயர்த்த லானும் என்பது பெயர்த்தும் எனத்திரிந்து நின்றது. நாம வண்ணங்களோடு ஆரூர் கேட்டலானும் அதனுல் பெயர்த்தலானும் எனக்கோடலின் உம்மை இறந்தது தழீஇயது. பெயர்த்தற்குச் செயப்படுபொருள் அவாய் நிலையான்வந்தது. அவன்கண் என்னும் கண்உருபு அவனுக்கு என குவ்வுருபாய் மயங்கி நின்றது. வண் ணம்—இலக்கணம். ஏகாரம் பிரிநிலை. பித்துப் போறலின் ஆகுபெயரான் பித்தெனப்பட்டது. பித்தி பிச்சியெனப் போலியாயிற்று. அன்றே=அப்பொழுதே. அன்பும் சிவமும் இரண்டன்மையானும், உலகியலுணர்வு தூர்ந்து முற்றுதலின் இடையீடின்மையானும் அன்றே என்றார். ஆகுபெயராகிய தன்னை என்பது ஈண்டேற் புழிக்கோடலால் தற்போதத்தை உணர்த்தி நின்றது. விரைவும் துணிவும் பற்றி 'தலைப்பட்டாள்' என இறந்த காலத்தாற் கூறினர். அகலிடம்=பூமி. ஆசாரம்= ஒழுக்கம். அன்னையையும் அத்தனையும் நீத்தலாய மாயையினையும், காரணக் கடவுளையும் நீத்தல். கட்புல னாகாமையின் இவ்வுடற்றோற்றத்திற்குக் காரணராய் கட்புலனாதற்குரியராய அன்னையும் பிதாவும் எனினும் அமையும். சத்தியம், ஞானம் இரண்டையும் அன்னை அத்தன் என்பாருமுளர். அகன்றாள் நீத்தாள் என்பன போல வைத்தோதாது மறந்தாள் என்றார், அஃது அடங்கற்குரியதன்றி அவைபோல அகறல் நீங்கற்குரிய தொன்றன்மையான்.

உலகெலாமாகி வேறா யுடனுமா யொளியா யோங் கும் தலைவன், அவையே தானேயாதன் முதலிய தன தியல்பை உயிர்கள் படிமுறையானுணர்ந்து உய்ந்து கோடற்பொருட்டு உத்தேசம், இலக்கணம், பரீக்ஷை

என மூத்திறப் படுத்துவைத்து அவற்றை அம்முறை யான் ஆய்ந்து துணியுமுறையும் நியாயநூல் முதலிய வற்றுள் அவரான் வகுத்தோதியருளப்பட்டது. அம் மூவகை தம்முள்வைத்து, பக்குவமுறையான் மேம்பட்டு நிகழும் நுண்ணுணர்வின்மையால் முதற்கண் ஞான நூலை ஓதுமுறையான் ஓதி, அதுபற்றி யவனைப் பெயர் மாத்திரையானெடுத்து வழங்குவதாய உத்தேச முறை பற்றி உணர்ந்துகொண்டனள் என்பார் 'முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்' எனவும்,

அஃதடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத் தால் நுண்ணுணர்வுடையளாய்ப் பொருளை உள்ளவா றுணர்தற்கு உரித்தாய இலக்கண உணர்ச்சியே உணர்ச்சி. உத்தேச உணர்ச்சி அதனை அறிதற் காதாரமாயதோர் இயல்பு என இங்ஙனம் அறிந்து அது நூலை யின்றியமையாமையின் மேலோதி ஒழிந்த நூற்பொருளைக் கேட்குமுறையாற் கேட்டு அதனானே பதி முதலிய முப்பொருளும் ஒன்றினொன்று வியாபக வியாப்பியமாய் நிற்குமாற்றை அங்ஙனம் அறிந்து கொண்டனள் என்பார் 'மூர்த்தியவனிருக்கும் வண்ணம் கேட்டாள்' எனவும்,

அஃதடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத் தான் அதி நுண்ணுணர்வுடையளாப் பரீக்ஷை யுணர்ச்சியே உணர்ச்சி. உத்தேசமும் இலக்கணமும் அதனை அறிதற்கு ஆதாரமாயதோர் இயல்பென இங்ஙனம் அறிந்து நியாயநூ லுறுப்புக்களாய ஏது திருட்டாந்த முதலியவற்றாற் சிந்தித்துப் பேரறிவாகிய சிவமும், சிற்றறிவாகிய தாமும் அத்துவிதமாய் நிற்ற லின் ஆண்டுத் தானென்றுளதென உணரப்பெறுது சிவத்தோற்ற மொன்றே காணப்பெற்று (நிருவிகற்ப சவிகற்ப மென்னும் இரண்டற்கும் இடைநிலத்தே நின்று) அறிந்தென்பார் 'பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்' எனவும்,

மூன்றும் முறையே அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ முதிர்ச்சியானே உள்ளவாறுணர்வு விளங்கி அவனியல்பு கேட்டற்காலத்து பொருட்டன்மை பற்றி பேதமாய்த் தோன்றி சிந்தித்தற் காலத்துக் கலப்புப் பற்றி அபேதமாய்த் தோன்றித் தெளிந்தபின், இவ் விரண்டுமின்றி நேரியனும் பரியனுமாயதோர் முறை பற்றி எவற்றினும் ஒற்றிற்று நின்றே, ஒன்றினும் பற்றிலனாய் வேறு தோன்றக் காண்டலின் ஏகதேச வுணர்வு நிகழ்ந்து சிறுபோகம் நிகழ்தற் கேதுவாய புறப்பற்று அகப்பற்று இரண்டும் தூலாருந்ததி முறை பற்றிப் பருவ முதிர்வித்து வியாபக வுணர்வை நிகழ் வித்துப் பரபோகம் பெறுதற் பொருட்டாம் என இங்ஙனம் அறிந்து புறப்பற்று அகப்பற்று இரண் டனையும் கைவிட்டு அத்தலைவனொருவன்கண்மாத் திரம் அன்புசெய்து அடங்கி நின்றனள் என்பார் 'பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்' எனவும்,

வியாபகமிழந்து கீழும் மேலும் சேறற்கேதுவாய இருவினைகள் ஞானநூலோதன் முதற் சிந்தித்தல் ஈறாய ஞான பூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிந்த உணர்வா னொழிந்துபோதலின், காரண மின்மையில் காரியமாகிய ஏகதேசச் செலவும் இன்றாய் ஒழியும். அஃதொழியவே அவள் காரணங்களின் வயத்தளா காது மேலங்ஙனம் தோன்றி நின்ற தலைவனது வியா பகத்தைத் தலைப்பட்டு ஒருவாற்றானும் குறைவின்றி இம்மையே சீவன் முத்தளாய் நிற்றலின் பசுத்துவ மாத்திரையாய்க் கேவலப்பட்டு நின்ற அவ்வுயிர் பின் மாயையாய்க் காரண உடலோடியைந்து அறிவு முதலியன பொதுவகையால் சமட்டிவடிவாக விளங்கிப் பின் அம்மாயையிற் றோன்றும் கலாதிகளோடியைந்து அவை வியட்டி வடிவாக விரிந்து தோன்றிச் சிறப்பு வகையான் விளங்க வேண்டுதலின் இங்ஙனம் சிறு போக நிகழ்ச்சிக் கேதுவாய சிற்றறிவை நிகழ்த்தி உபகரிக்கும் அம்மாயையினையும் அதனைக்கொண்டு

இலயம் போகம் அதிகாரம் என்னும் அவத்தை பற்றிப் பொது வியல்பில் நின்று ஐந்தொழில் செய்யும் முதல் வனையும் உருவமாக வைத்து 'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்' எனவும்,

மேலோதி யொழிந்ததாய இந்நிட்டையுடையாள் செய்தன வெல்லாம் தவமாமாகலின், அவள் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் வேண்டா வென்பார் 'அகன்றாள் அகலிடத்தாராசாரத்தை' எனவும்,

ஏகதேசக் காட்சி அஞ்ஞானம் விருப்பு வெறுப்பு என்பன இன்மையின் தற்போதம் மூளையா. உலகப் பொருள்போல் வைத்து அது எனச் சுட்டியறியுமாறு அவன் வேறல்லனாய்த் தன்னுணர்வின்கண் விரவி வேற்றுமை தோன்றாது நிற்றலானும், பொருட்டன்மைபற்றி வேறாமாயினும் முத்திக்காலத்துச் சீவன் சிவனையொழிதலானும் 'தன்னை மறந்தாள்' எனவும்,

அறிவிறந்தறியும் அவ்வுயிர் சிவமேயாய்ச் சீவத்துவம் நீங்கிய தென்பார் 'தன்னாமங்கெட்டாள்' எனவும்,

இவ்வுடம்பு நீங்கப்பெறும் பரமுத்தி நிலையில் தமது வியாபகமெங்கும் அறிவு விளங்கப்பெற்று அத்தலைவனேடொத்து நின்று தொன்னிலையிற் பிறழாது வைகி வாழுமென்பார் 'தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே' எனவும் வைத்து உபதேசித்தருளினர்.

அற்றேல் அஃதங்ஙனமாக நாமம் வண்ணம் என்பன உத்தேசம், இலக்கணம் என்ற தொக்கும். ஆரூர் கேட்டல் பரீக்ஷையாம்மாறு யாங்ஙனமெனிற் கூறுதும். பரீக்ஷையாவது இப்பொருட்கு இவ்வியல்பு பொருந்துமோ அன்றோ என நியாய நூலுள் ஓதிய முறை வழுவாது ஆய்ந்து துணிதல். ஈண்டு அதுவும் ஒன்றன்கண் வைத்துக் காட்டுதும். இறைவன் பொருட்டன்மை

பற்றி வேறு பொருளாயினும் எப்பொருளினும் விரவி வேற்றுமை தோற்றாது நிற்கும் என்பது மேற்கோள். பேதம், அபேதம், பேதாபேதம் என்னும் மூன்றற்கும் பொதுமையின் அத்துவித நிலையன் ஆகலான் என்பது ஏது. அறிவொளிபோலும் அவ்வியல்பு என்பது எடுத்துக்காட்டு. இதனானே நியாயநூலுறுப்புப்பற்றி இறைவன் இயல்பு பரீக்ஷிக்கப்பட்டவாறறிக.

அற்றேல், ஈண்டு பின்னையவனுடைய ஆரூர் கேட்டிலமாலெனின், திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியிற் செய்யும் வழிபாடொன்றே வெளிப்பட்டருளுவதாய் அடிப்பட்டுவரும் அன்பு விளையாமையின் ஆண்டுச் செய்யும் வழிபாடொன்றே அத்துவித ஞானத்தை நிலைபெறுத்தற் பயத்த வன்மையான் ஓதுமுறையானேதிக் கேட்குமுறையாற் கேட்ட அந்நங்கை கேட்டற்காலத்துப் பேதமாய் நின்ற இறைவன் சிந்தித்தற்காலத்துத் தம்மோடபேதமாய் அவ்வாறே உயிர்ப்பொருள் உயிரில்பொருள் எல்லாம் அவையே தானாய் அவன்நிற்றல் கண்டு அவற்றையெல்லாம் அங்ஙனம் அவனாய்ப் பாவித்து வழிபடுமாயினும் ஆண்டெல்லாம் அன்பு விளையாமையானும் ஈண்டு அது விளையுமாற்றானும் ஆரூர்கேளாமை யாண்டையதென்றொழிக. இஃது ஏனையிடங்கட்கும் ஒக்குமேனும் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுள் எழுந்தருளி வைகற்குரிய இடமாகலின் ஆரூரெனச் சிறப்பித்தருளினார்.

அற்றேல் அஃதங்ஙனமாக 'தாவரசங்கமங்கள் என்றிரண் டுருவினின்று மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்' என்பவாகலின், ஆண்டும் வெளிப்பட்டருளுவதாய் அடிப்பட்டுவரும் அன்பு விளையுமாகலின் திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியினன்றி அது விளையாதென்றல் செல்லாதாம் பிறவெனின், அற்றன்று. அவனை உள்ளவாறுணரும்

நேசத்தராய சங்கமம் பலவாகாது சில வாகலானும், அதுவும் எளிதாகாது காண்டற்கு மிகப்பெரிதும் அரிதாகலானும், தாவரம் அங்ஙனமன்றி சிலவன்றி பலவாமாகலானும் அதுபற்றி அதுஉயிர்க்கு அரிதாகாது காண்டற் கெளிதாகலானும், பொதுமையின் யார்க்கும் அரிதாகாது என்பது எளிதி னெய்துமதனை எடுத்தோதல் முறையாகலானும், ஓதல் பற்றி ஓதியார்க்குத் தூல வடிவம் உணரப்படுமென்பது நீலகண்ட பாடியத்துள் காண்க.

சிந்தித்தற் காலத்து ஏது முதலியவற்றால் பரீக்ஷிக்கப்படும் என்பது பக்குவமுதிர்ச்சியால் நாலாம் சத்திநிபாதம் எய்தப் பெற்றார்க்கு அக் கேட்டலறிவு அந்தமாதலின்றி முதிர்ந்து முறுகி விளையும். அப்பொழுது தம் ஆசிரியராதல் தம்மோ டொருசாலை மாணாக்கராய்த் தம்மின் மூத்தாருள் ஒருவராதல், சிந்திப்பிக்கப்பெறும் அந்நூற் பொருளின்கண்ணே கருத்தொருங்கி முன்னெடுபின் மலைவற ஏது திருட்டாந்தம் முதலியவற்றாற் சிந்தித்து என வைத்துரைத்தருளிய உரையோத்துடையார் திருவாக்கானறிக. இனி மாயை தாய் போறல் மாயாடன்வயிற்றாற் றொடக்குண்டு வாழு மாயை என்றற் றொடக்கத்தவற்றானறிந்து கொள்ளப்படும்.

இஃது என்சொல்லியவாறோ வெனின், ஓதல் கேட்டல் முதலியவற்றி னியல்பும், அவற்றி னிகழும் அனுபவ மாமாறும், நிட்டை மேவியாரது ஒழுக்கமும், தற்போத முளையாதவாறு உபகரித்துச் சிவானுபவம் சுவானுபூதிகமாமாறு அடங்கி நிற்கு முறையும், பாசவீடு சிவப்பேறு என்பவற்றின் இயல்பும் கூறியவாறாயிற்று.

குருபாதம்

அற்புதத் திருவந்தாதி

(வித்துவான் திரு. S. தண்டபாணி தேசிகர் அவர்கள்,
திருவாரூர்.)

நூல்:— காரைக்காலம்மையாரியற்றிய நூல்களில் இது நான்காவது. இது நூற்றொரு செய்யுள்களை உடையது. வெண்பாவாலானது. அந்தாதித் தொடையால் ஆக்கப்பெற்றது. அந்தாதி யென்பது ஒரு செய்யுளி னிறுதி மற்றொரு செய்யுளின் முதலாக வரவும், முதற்பாடலும் இறுதிப்பாடலும் மண்டலித்து வரவும் பாடப்பெறுவது. அவ்வாறே இச்சிறு நூல் 'பிறந்து' என்று தொடங்கிப் 'பிறந்து' என்று முடிந்திருப்பது நோக்குதற்குரியது. இவ்விலக்கண அமைதி பெற்ற அந்தாதி, அம்மையார் அகக்கண்ணாலும் புறக்கண்ணாலுங் கண்ட ஆண்டவன் அருளுருவ அமைப்பை, அருட்டிறத்தை அடியேங்களும் உய்ய எடுத்துக் காட்டுகிறது. இவ்வந்தாதி படிப்பார் எய்தும் பயனை அம்மையாரே அறிவிக்கிறார்கள், "பரவுவார் ஆராத அன்பினோடு அண்ணலைச் சென்றேத்துவார்" என்று அருளியுள்ளார்கள். எவ்வாறு ஏத்துவார்கள் எனின் இறைவனிடம் எண்ணெய் ஒழுக்குப்போல இடையறாப் பேரன்பு உண்டாகி ஏத்துவார்கள் என்கின்றார்கள். இந்நூல் ஏன் இத்தகைய தன்மையை யளிக்கின்றது எனின், இந்நூல் ஆக்கியோர் தன்மை நூலுக் கிருக்கின்றது. ஓதுவாரையும் அத்தன்மை யடைவிக்கும் என்று உணரப்பெறும். "உரையினால் இம்மாலையந்தாதி வெண்பாக், **கரைவினாற்** காரைக்காற் பேய்ச்சொல் பரவினார்" என்பதை ஊன்றி நோக்குவோம். காரைக் காலம்மை—அம்மையல்ல எல்லாம் தன்வசமற்றுப் பதி வசமாய்ப் பேய்த்தன்மை கொண்ட காரைக்காற் பேய் மனங்கரைந்து சொன்ன வெண்பாமாலை யந்தாதி.

இதனைத் தோத்திரமாகக்கொண்டு வழிபடுவார் முற்கூறியபயனை எய்துவர் என்பது குறிக்கப்பெற்றுள்ளது. ஆதலால் நூலின் பொதுவமைப்பு வெண்பாவாலாய அந்தாதிமாலை. கரைந்து கரைந்து கூறியது. இதனை ஓதுவாரும் நீங்கா அன்பு நிறையப் பெறுவர் எனக் கூறப்பெற்றது.

அற்புதம்:— அற்புதம் என்பது எண்வகைச் சுவைகளில் ஒன்று. உலகில் இதுவரையிற் காணாத ஒன்றைக் கண்டபோதும், மிகப்பெரிய ஒன்றையோ சிறிய ஒன்றையோ கண்டபோதும், ஒன்று ஒன்றாய் மாறியபோதும் உண்டாகின்ற அறிவின் சுவை.

> "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
> மதிமை சாலா மருட்கை நான்கே"

என்பது தொல்காப்பியம்.

மருட்கை யென்பதும், அற்புதம் என்பதும், வியப்பு என்பதும் ஒரே பொருள் குறிப்பன. தொல்காப்பியச் சூத்திரத்து 'மதிமைசாலா மருட்கை' யென அடைமொழி கொடுத்தமையால் சிறுபொருள் பெருந்தொழில் செய்தலும், பெரும்பொருள் சிறுதொழில் செய்தலும் அற்புதம் என உரையாசிரியர் உரைப்பர். ஆக, அம்மையார் ஆண்டவனிடத்து இத்தகைய அற்புத நிகழ்ச்சிகளைக்கண்டு வினவுகின்றார்க ளாதலின் **அற்புதத் திருவந்தாதி** எனப் பெயர்பெற்றது. ஒவ்வொரு பாடலிலும் அவர்கள் கண்ட அற்புதம் நம்மையும் அற்புதத்தில் ஆழ்த்துகிறது. நிற்க வடமொழி நூல் ஒன்றில் அற்புதரசத்தைப் பற்றிப் பேசும்போது

वीराश्रित भयान काद्यनन्तरं वीर रस फलं भूतः अद्भुतः

என்று கூறுகிறது. அதாவது வீரச்சுவையால் உண்டாக்கப் பெற்ற அச்சத்தின் பின் வீரச்சுவையின் பயனாக விளைவது **அற்புதம்** என்பதாம். அகப்பகை கடிந்து அருள் வெற்றிகண்ட அம்மையார் புலக்களிறு

கள் பொருந்திய மலக்காட்டை யழித்து ஆன்மாக் களைப் பக்குவ நிலைக்கேற்ப ஆட்கொள்ளும் பெருவீரர். வீரத்தால் விளைந்த வியப்பையே இந்நூலில் அறிவிக்கின்றார்கள். இந்த அழகும் இந்நூலிற் பலவிடங்களிற் பரக்கக் காணப்பெறும். இத்தகைய அற்புத இலக்கணங்களை மனதில் அமைத்துக்கொண்டு அற்புதத் திருவந்தாதியை ஆராயின் பலவியப்புக்கள் பாடல் தோறும் மிளிரும். அவற்றுள் சிலவற்றை ஆராய்வோம்.

வியப்பு ஒன்று:— காலங் கடந்த கண்ணுதற்பெருமான் ஒருநாளிற் காணப்பெறும் சிறு பொழுதுகள் நான்காகக் காட்சியளிக்கின்றார், இது என்ன வியப்பு! சிவபெருமான் காலைநேரமாகக் காட்சியளிக்கின்றார். காலை நேரத்து உலகை இருள்கடிந்து விளக்கும் சூரியன் செந்நிறக் கிரணத்தால் அடுத்த பொருளையும் செந்நிறமாக்கித் தோன்றுவன்; அங்ஙனமே சிவபிரான் திருமேனியும் செந்நிறமாதலின் 'காலையே போன்றிலங்கும் மேனி' என்று காலை, சிவபெருமான் மேனியாயிற்று. சிவந்தமேனிமேல் வெண்ணீறு விளங்குகிறது. சூரியன் உச்சியில் வந்து வெள்ளொளி வீசும் நண்பகல்போல் விளங்குகிறது. இதனைக் "கடும்பகலின் வேலையேபோன்றிலங்கும் வெண்ணீறு" என்ற பகுதி விளக்கும். திருமுடியிற் சடை செவ்வானம் போன்றது. அது மாலைக்காலம். கழுத்து விடமுண்டு கறுத்த கழுத்து. அது இருட்காலம் போன்றது. எல்லாங்கூடி காலம் வென்ற கடவுள் சிறுபொழுது நான்காக இருக்கின்றார் என்பது எவ்வளவு வியப்பினை ஆக்குகின்றது.

மற்றொன்று:— அம்மையார் ஆண்டவன் திருவுருவை உற்று நோக்கினார்கள். ஒருபாதி உமையம்மை, ஒருபாதி திருமால். இருபாதியும் இவ்வாறாக எந்தப்பாதி நீறணிந்த தன்பாதியென யாமறியக் கிடப்பது என்கின்றார்கள். இதனை யறிவிப்பது,

பண்புணர மாட்டேனுன் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா—பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவ(து)
எவ்வுருவோ நின்னுருவ மேல்.

என்ற செய்யுள். இதில் நெடுநாள் இருந்து எண்ணியும் தன்மை யறியக்கூடவில்லை. நீயே காட்டவேண்டும். "கண்ணுதலாய் காட்டாக்கால் காண்பாரார்" என்று தற்போதமழிந்து தத்போதநிலையில் நின்று சொல்லுகிறார்கள். ஒருபாதி யுமையும், ஒருபாதி மாலுமாக இருத்தலின் சிவம் இல்லை யென்றே சொல்லிவிடுவேன்; கண்சேர்ந்த நெற்றியும், நீலகண்டமும் உன்னுருவந்தான் என்பதை உணர்த்தி நிற்கின்றன; அதனாலே இந்த அற்புதம் எனக்கு எழுந்தது, என்று விண்ணப்பிக்கின்றபோது வியப்பு மிகுகின்றது.

சிவபெருமானும் திருமாலும்:— ஒரே மேனியில் மாலும் பரமனுமாகக் காட்சி வழங்குகின்றனர். கண்ட அம்மை வியந்தனர். அவ்வியப்பைப் பிறர்கேட்க ஒரு சிறந்த உவமானத்தின் வாயிலாக விளக்குவார் போல "பொற்குன்று நீலமணிக்குன்றும் நிற்கின்ற போலும் நெடிது" என்னும் பகுதியால் பொன்மலையும் நீலமலையும் சேர்ந்து நீண்ட காலம் நிற்பதுபோல இருந்தது என்று ஐயமகற்றுவார்போல வியப்பை உள்ளத்து ஆக்குகிறார்கள்.

மற்றொரு வியப்பு:- திரிபுராரிகள் சிவபூசையிற் சிறந்தவர்கள். பெற்ற வலியோ! பறக்குங் கோட்டைகளைக்கொண்டு விருப்பில்லா ரிடங்களை யழித்தல். இருந்தும் சிவபெருமானால் வலியொடுக்கப் பெற்றனர். கோட்டைகள் எரிந்தும் உய்திபெற்றனர். வாயிற்காவலராகிய அணுக்கச் சேவையை யடைந்தனர். சிவபூசை செய்தவர்களை இறைவன் வலியொடுக்கலாமா? என்பது இயற்கையில் எழும் ஐயம். அதனை நீக்குகின்றார்கள் அம்மையார். 'அந்தரத்தே, நாம் ஆள் என்று ஏத்தாதார் நகர் மூன்றும்- வேமாறு செற்றான்" என்கிறார்கள்.

இதில், இறைவனை ஏத்தவேண்டிய முறை தன்முனைப்பு அற்று நாம் இறைவனடிமை, அழிக்க நமக்கு உரிமை யேது, அழித்த ஒன்றையேனுமாக்கும் வன்மையிருந்தா லல்லவா அழிக்கலாம். அழிப்பானும் ஆக்குவானும் அளிப்பானும் அவனே. நாம், முத்தொழிலையும் சந்நிதி மாத்திரையினால் நிகழ்விக்கும் ஆண்டவனுடைய மீளா ஆட்கள் என்ற மனப்பான்மையோடு சிவபூசை செய்ய வேண்டும் என்பதாம். அங்ஙனமிருக்க திரிபுர அசுரர் கள் ஏத்தினார்கள். ஆனால் நாமாள் என்று ஏத்தவில்லை. அதனாலேயே தேவர்களுக்கும் சிவபெருமானை வேண்ட முடிந்தது. இறைவனும் இறைமைத்தன்மை காக்க வலியொடுக்கத் திருவருள் நேர்ந்தது என்ற நுணுகிய காரணத்தை வியப்பின் நடுவில் பொதிந்து வைக் கின்றார்கள். இறைவன் திரிபுரங்களைச் சிரித்து எரித் தாராயினும், அம்புசெலுத்தியருளினார் என்று 'ஒரு கணையாற் செற்றான்' என்று அம்மையார் அறிவித் தருளுகின்றனர். 'வரைசிலையா வாசுகிமா நாணுக் கோத்துத் துளைத்தானை'' என்பனபோன்ற பலபகுதி களால் அப்பரடிகள் வாக்கும் வலியுறுக்கின்றது.

ஒரு வேண்டுகோள் விடுக்கின்றனர்:- இறைவா! தேவரீர் திருநடனம் செய்யுமிடம் பெருங்காடு ஆயிற்றே. அதிலும் பலர் வாழ்விறுதியைப் பலகாலம் பார்த்துப் பல பெரியார் உடலையும் விழுங்கிய சுடுகாடாயிற்றே! அங்கே எங்கள் உமையம்மையை உடனழைத்துப் போகவேண்டாம் என்று வேண்டுகின்றனர். ஆனாலும் அம்மையை யழைத்துப் போவது, காணும்பேறுபெற்ற எங்களுக்குப் பேரழகுதான். பவளமலையில் மரகதக் கொடி படர்ந்து கவின்தமாதிரி இருக்கும். காண்யார் நலமட்டுங்கருதி அங்கு அழைத்துப்போக வேண்டாம் என்று பெண்மைக்குப் பெண்மை இரங்கு நிலையில் இயம்புவது எவ்வளவு அழகிது. (பாடல் 57) பெரு மானே உமது சடைபெரிய வானம். ஏன்! வானத்திற் கங்கையிருக்கிறது. சந்திரன் பாம்பு (ராகு) முதலியன

இயங்குகின்றன. வானமும் அப்படியே. அங்ஙனம் சடையை வானமாகக் கண்ட அவர்கள், விரும்பி யடைந்த அன்பர்களுக்கு அதுவே பொற்கொழுந் தானது என்கிறார்கள். அடையாத வீணர்களுக்குத் தீக்கொடியாகத் திகழும் என்கிறார்கள்.

இறைவன் அணிந்துள்ள பாம்புகளின் தடு மாற்றத்தை அம்மையார் அறிவிக்கும் திறம்:- பாம்பு, இறைவன் மார்பிலுள்ள பன்றிக்கொம்பை மதியென்று மயங்கும். திருமுடியிலுள்ள பிறையைப் பார்க்கும். 'இப்படித்துணிவு பிறவாதபடி இன்றளவும் பார்த்துத் தெளியாது தவிக்கின்றது புத்திகெட்ட பாம்பு' என்று கூறுகின்ற வியப்பு இன்பம் பெருக்குவனவற்றுள் சிறந்ததாம். 'இந்தப் பாம்புகளுக்கு விஷத்தன்மை எப்படி வந்தது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இன்று தெரிந்தது. உம்முடைய திருக்கண்டத்தை நக்கி நக்கி விஷம் பெற்றிருக்கவேண்டும்' என்கின்றார்கள்.

'எப்போதும் உயர்வற உயர்ந்த பெரியோர்கள் ஒரு சிறிய விளையாட்டால் ஒரு வடுவைப் பெற்றால் அத் தகைய வடுவை வேற்றிடத்திலும் உண்டாக்கித் தங்கள் குறை வெளிக்குத் தெரியாதபடி மறைத்து விடுவர். அதனைத் தேவரீரிடம் கண்டேன். தேவரீருக்கும் உமைக்கும் ஊடலாயிற்று. ஊடலையகற்ற அம்மையின் திருவடியில் முடியைப் பொருந்தவைத்தீர் (நமஸ்கரித் தீர்). திருவடியிலுள்ள செம்பஞ்சுக் குழம்பு திருமுடியில் ஒட்டிக்கொண்டது. திருமுடி சிவந்தது. இந்தச் சிறுமையை மறைக்க மாலைக் காலத்து வானத்திலும் செம்மையை (செவ்வானத்தை) ஆக்கிவிட்டீர். இது என்ன வியப்பு' என்கின்றார்கள். இங்ஙனமாக ஒவ் வொரு பாடல்களுமே வியப்பினும் வியப்பாகவே விளங்குகின்றன.

இவ்வந்தாதியில், 'வானத்தான் என்பாரும் என்க' என்ற திருப்பாடல் வெளிப்படையான சொல்லுடைய

தாயினும் மிக ஆழ்ந்த பொருளமைதியோடு ஆண்டவன் நெஞ்சகத் தாயினன் என்று உறுதி கூறுகின்றது. அவ்வுறுதியால் யானே தவஞ்செய்தேன், என் நெஞ்சே நன்னெஞ்சம் என்பன போன்ற வீர எழுச்சி விளைகின்றன. இத்தகைய பாடல்கள் தனி இன்பம் தருவன.

அம்மை யடைந்தபேறு பேய்ப்பேறு. அதனல் பேய்க் கணத்துள் ஒன்ருய நாம் எதுபெறினும் வேண்டேம். நாவாற் பாமாலை சூட்டுவோம். திருவடியிற் பூமாலை புனைவோம். இத்தகைய அறிவு கைவரப் பெற்ருல் தீவினையிருள் தானே தடுக்கப்பெறும் என்று அம்மையார் நாம் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளையும் தொகுத்துக் குறிப்பிடுகின்ருர்கள். (86, 87)

இதுகாறுங் காட்டியவற்ருல் அற்புதத் திருவந்தாதி என்பது அற்புதச் சுவையின் நிலைக்களனுக இலக்கண நூல்கள் வரையறுத்த அறுவகையானும் ஆகிய அற்புதங்கள் நூற்றினை விளக்குவது; இறுதியில் இந்நூல் ஓதுவார் எய்தும் பயனை யறிவிப்பது என்பன சுருக்கமாகத் தெரியக்கிடக்கின்றன. சிறப்பாக இறைவனியல்பு, ஆன்மாவினியல்பு, திருமேனி யமைப்புகள், மதி, பாம்பு, கங்கை முதலிய அணிகளியல்பு முதலியவற்றின் வியந்த தன்மைகளும் விளக்கப்பெறுகின்றன. பெரும்பான்மையாக இறைவனிடுகாட்டியற்றும் நடமே பலவிடங்களிற் பகரப் பெறுகின்றன.

அந்தாதியுள் அருமந்திரமாக அடியேன் மனத்து இருந்து அருநெறிகாட்டும் பாடல்:

அறிவானுந் தானே யறிவிப்பான் தானே
யறிவாய் அறிகின்ருன் தானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே யவன்.

—o—

உ
சிவமயம்

பெரிய புராணத்
திருப்பாட்டின் பேருரை

[வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், தஞ்சை.]

திருத்தொண்டர் புராணத்தைத் தெரியாதாரிலர். அது தெய்வச் சேக்கிழார் பெருமான் திருவாக்கு. அத் திருப்பாடல்களெல்லாம் தெய்வம் மணங்கமழ்வன. தெய்வங்கலவாத பாடல்கள் உயிரில்லாத உடம்பு போல்வனவே. தமிழ்நாடுசெய்த தவப்பயனாய் அவதரித்தவர் நமது தெய்வச் சேக்கிழார். சைவ உலகம் தவநெறியில் என்றும் நிலைபெற்றிருக்குமாறே சேக்கிழார் பிரான் திருவவதாரம் செய்தார். அப்பெருமான் நம் போலும் புலவரல்லர். அப்பெருமானையோ, ஸ்ரீகுமர குருபர சுவாமிகளையோ, மாதவச் சிவஞான சுவாமிகளையோ இப் பெற்றிவாய்ந்த பிற பெரியோர்களையோ புலவர் என்ற சொல்லால் குறிப்பிடுதல் சாலாதென்பதை அறிஞர் எவரும் அறிவர். அப்பெரியோரைப் புலவரென வழங்கின், நம்மை எச்சொல்லால் வழங்குவது? வரலாற்று முறையிற் பயின்ற கல்வியறிவு ஒழுக்க முடைய பெரியோர் யாவரும் இன்னாருக்கு இன்ன சொல்லை வழங்கவேண்டுமென எளிதிலறிவர், அப்படிப் பட்ட சான்றோரைப் பின்பற்றிய பெரியோர் அவராகலின்.

இங்கொன்று அங்கொன்றுகச் சில செய்யுட்களையேயன்றி நான்முழுவதையும் வரலாற்று முறையில் கற்கும் ஊழற்றோர் முறைபிறழ்ந்து கூறுதலில் யாதொரு வியப்புமின்று. எனினும், உலகத்து மக்கள் யாவரும் கற்றோரைப் பின்பற்றிச் செல்லுந் தன்மையுடையார். கற்றோர் உலகத்து மக்கள் பொருட்டாவது எல்லாவற்றானும் தூயோராதல் வேண்டும். தவநெறியில்

ஒழுகுதல் வேண்டும். அவர் அவ்வகையின ரிலராயின் உலகத்து மக்களை ஒருங்கே கெடுத்தவராவார். பாமர உலகம் பண்டித ருலகத்தாலேயே திருந்துதல் ஒருதலை. இஃது எந்நாட்டினருக்கும், எம்மொழியினருக்கும் ஒத்த துணிபே. எக்காலத்தும் இது வேண்டப்பெறுவ தொன்றேயாம். ஒரு நாட்டினரை ஒரு மொழியினரை ஒரு சாதியினரைக் கெடுத்தலும், எடுத்தலும் அந்நாட்டில் அம்மொழியில், அச்சாதியிற் றோன்றிய கற்றோரேயாவர். கல்லாதார் கூறும்சொல் வலியற்றது. கற்றோர் கூறும் சொல்லே வலியாதலுடையது. அச் சொல்லே மக்கட்கு உறுதி பயப்பனவென மக்களால் நம்பப்பெறுவது. கற்றோர் கூறும் பொருள்களையே மக்கள் யாவரும் காமுறுவர். எனவே, கற்றோர் கல்விநல முடையவராத லொன்றேயன்றி அறிவு ஒழுக்க முதலியன நிறைந்த தூயோராதலும் இன்றியமையாது வேண்டப் பெறுவர். அவர் வழங்குவது அவரிடம் நிலைபெற்ற குணங்களையும் செய்கைகளையுமே. கற்ற கல்விக்குத் தக்க அறிவும் ஒழுக்கமும் நிறைந்தவராயின் உலகத்து நன்மக்களால் அவர் போற்றற் குரியவராவார்.

இனி, தெய்வத் திருநலங்கனிந்த பாடல்களுக்கு உரை கூறுவார் அவ்வச் சமய நெறியிற் கூறிய வழக்க வொழுக்கங்களை விழுப்பம் உடையார்பால் அச்சமய வொழுங்கில் நின்று நிலைபெற்று அறிந்து உரைகூறுத லொன்றே பொருந்துவதாம். சமயநெறி நில்லார், சமயத் தலைநூல்கட்குத் தாங்கற்ற கருவிநூல் ஒன்றே துணைகொண்டு உரை கூறுவது பொருந்தாது. கருவி நூல் மதுகையுடையார் சமய நூல்களைச் சமயச் சடங்குகளுடன் சமயநெறியில் நிலைநின்று திருவருளே துணையாகக் காட்டக் கண்டுணர்தல் வேண்டும். அவ்வாறின்றித் தம் மனம்போனவாறெல்லாம் போதல் ஒழுங்கில்லாதார் கூற்றேயாம். தெய்வச் சேக்கிழார் அருளிய திருத் தொண்டர் புராணத்தை யறிவதன்முன் கருவிநூற் பயிற்சி மிக்காராதல் வேண்டும். சமயம்,

விசேடம், நிர்வாண முதலிய தீக்ஷைகளையுடையோராய், தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களை யோதி யுணர்ந்தோராய், மெய்கண்ட நூல்களை அம் மெய்கண்ட சந்தானத்துக் குரவர்கள்பால் ஓதியுணர்ந்த அனுபவப் பயனுடையராய் இருத்தல் வேண்டும். அவருக்கே திருத் தொண்டர் புராணத்தின் உண்மைக் கருத்துக்கள் முரணின்றி விளங்குவனவாம். ஏனையோர் அக் கருத்துக்கள் விளங்கப் பெறார். இதனை ஒரு திருப் பாட்டில் வைத்து விளங்க உணர்வோம்.

" சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில். "

(இ-ள்) தவ முதல்வர் சம்பந்தர்தாம்—முற்றவ விசேடத்தானே திருஞான சம்பந்தராகி விளங்கும் ஆளுடைய பிள்ளையார்; சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக் கலைஞானம்—சிவபெருமான் திருவடியையே சிந்தித்தலாகிய திருவை வளர் விக்கும் ஞானமாகிய ஒப்பில்லாத கலைஞானமென்னும் அபர ஞானத்தினையும்; பவமதனை யற மாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்—பசுத்துவ வாதனையைப் பற்றற நீக்கும் தெளிதலின் மேலாய் விளங்கும் ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்னும் பரஞானத்தினையும்; அந் நிலையில் உணர்ந்தார்—அங்ஙனம் உபதேசஞானப் பாலமிர்தம் உண்டருளிய மாத்திரையே இடையீடின்றி ஓதாமே உணர்ந் தருளினர். (எ-று).

இனி, சிவப்பிரகாசத்தில்,

" ... ... உயர்ஞான மிரண்டா மாறு
மலமகல வகலாத மன்னு போதத்
திருவருளொன் றுன்றதனைத் தெளிய வோதுஞ்
சிவாகமமென் றுலகறியச் செப்பும் நூலே. "

(இ-ள்) உயர்ஞானம் இரண்டாம்—உயர்ஞானம் பரஞானம் அபரஞானம் என இரண்டாம்; மாறு மலம் அகல அகலாத மன்னுபோதத்

திருவருள் ஒன்று—பிராரத்தவினை மங்கிப் போயவழியும் மங்காது நின்று உழல்விப்பதாகிய பசுத்துவ வாதனை பற்றறக் கழியுமாறு நிலைபெற்று உபகரிக்கும் தெளிதலறிவின் பயனாகி விளங்கும் திருவருள் ஞானம் ஒன்று; அதனை தெளிய ஓதும் சிவாகமம் ஒன்று—அத்திருவருள் ஞானத்தினைச் சிந்தித்தற்குச் சாதகமாய் ஓதப்படும் சிவாகமஞானம் மற்றொரு ஞானம் ஆகும்; என்று உலகு அறிய நூல் செப்பும்—என்றும் உயர்ந்தோர் அறியும் படி அவ்வாகமங்கள் சொல்லும் (எ-று).

இதனுள் மாறா மலம் அகல அகலாத மன்னு போதம் என்றதனால் தெளிதலும், அதன் பயனாகிய திருவருள் ஞானம் என்றதனால் நிட்டையாகிய அனுபூதியும், ஓதும் சிவாகமம் என்றதனால் கேட்டலும், தெளிய என்றதனால் சிந்தனையும் பெறப்படும். ஈண்டு ஓதலின் பயனாகிய கேட்டலை ஓதல் எனக் காரணமாக வும், தெளிதற்குக் காரணமாகிய சிந்தனையைத் தெளிதல் எனக் காரியமாகவும் உபசரித்தார். எனவே, ஞானம் பரஞானம் அபரஞானம் என இரண்டாமாறும், கேட்டல் முதலிய நான்கும் அவற்றின் வகையாமாறும் காண்க.

"மேவரு ஞான மிரண்டவற் றொன்று விமலனார் பாத தாமரையே, யோவரு மன்பி னுணர்திரு வளிக்கு மொப்பிலா வுயர்கலை ஞானந், தாவரும் பவத்தை வேரொடுங் களையுந் தக்க மெய்ஞ் ஞானமொன் றிவற்றாற், சாவதும் பிறப்புந் தணப்புறச் சிவத்தைச் சார்ந்தது வாய்நிற்றல் யோகம்"

என்பது திருத்தணிகைப் புராணச் செய்யுள். மெய் கண்ட சந்தானத்தின் மேவிய தணிகைப் புராண முடையார் அப் பெரியபுராணத் திருப்பாட்டுக்கு உரை காணுதல் அறிந்து இன்புறற்பாலது. "ஒன்று விமலனார் பாத தாமரையே ஓவருமன்பி னுணர்திரு வளிக்குமொப் பிலாவுயர்கலை ஞானம்" என்பது 'சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்—உவமையிலாக் கலைஞானம்' என்பன ஒரு தொடரென அறிவுறுக்கின்றது. "தாவ

ரும் பவத்தை வேரொடுங் களையும் தக்க மெய்ஞ்ஞானம் ஒன்று" என்பது 'பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என்பன ஒரு தொடர் என அறிவுறுத்துகின்றது. எனவே வரலாற்று முறையில் வழிபாடாற்றி ஒரு நூலைப் பெற்றார் முன்னோர் நூலொடு முரணாது பொருளறிதலை யும், அவ்வாறு பெறாதார் முன்னோர் நூலொடு முரணிப் பொருளறிதலையும் எளிதாக எவரு முணர்வர்.

இனிச் சீகாழிப் புராண முடையாரும் அப் பெரிய புராணத் திருப்பாட்டின் பொருளையே இனிதமைத்து,

"துடைத்தலு ஞான போனக முண்ட தோன்றலா ரான்ற பல்கலைகள், இடைப்புணர் ஞானந் தோய்ந்து தோய் வின்றி எவ்வுயிர்க் கண்ணுமோர் நிலையே, படைத் தளித்தழிக்கு நிறைபரம் பொருளுட் படரிரு ஞானமு மாங்கே, கிடைத்தன ரொருதன் ருதையு மாங்கே கிட்டினார் சிறிதுளம் வெகுண்டு" எனக் கூறுகின்றார்.

(இ-ள்) ஞான போனக முண்ட தோன்றலார்—உபதேச ஞானப்பாலமு துண்டருளிய ஆளுடைய பிள்ளையார், ஆங்கே—அவ்வுபதேச ஞானப்பாலமுதுண்ட மாத்திரையே, ஆன்ற பல்கலைகள் இடைப் புணர் ஞானம்—விரிந்த வேதாகம முதலிய பலகலைகள் பற்றுக் கோடாக விளங்கும் கேட்டல் சிந்தித்தல் என்னும் அபரஞானங் களிரண்டினையும், எவ்வுயிர்க்கண்ணும் ஓர் நிலையே நிறை— எவ்லா வுயிர்களிடத்தும் ஒரு பெற்றியாகவே கலந்து நிறைகின்ற, படைத்தளித் தழிக்கும் பரம் பொருளுள்—படைத்தும் காத்தும் துடைத்தும் அனுக்கிரகிக்கின்ற பரம் பொருளாகிய சிவ பெருமானது சீபாத நிழலின்கீழ், தோய்ந்து தோய்வின்றிப் படரிரு ஞானமும் — பசுத்துவ வாதனைபற்றியும் பற்றாதுங் கலந்துவிரியும் தெளிதலும் நிட்டையுமாகிய பரஞானங்களிரண் டினையும், கிடைத்தனர்—இடையூடின்றி ஒதாமே யுணர்ந்தருளி னர் (எ-று).

"உயிர்களுக்கு முற்செய்தவத்தான் ஞானம் நிகழும். ஆளுடைய பிள்ளையார் முதலாயினோர்க்குத் தவமின்றி

யும் ஞானம் நிகழ்ந்தவாறென்னை என்னுங் கடாவை விடுத்தற்கு 'மேற் செய்துழி' யென ஈண்டும் வலியுறுத்தார்'' என மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான போதச் சிற்றுரையிற் கூறியவாறு காண்க.

"ஆளுடைய பிள்ளையார் முதலிய நாயன்மார்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்ததாலோ வென்னும் ஆசங்கையை நீக்குதற்கும் படிமுறையானன்றி இவ்வொரு பிறவியிற்செய்த தவந்தானே அமையாதென்பது உணர்த்துதற்கும் முற்செய்தவம் என விசேடித்தார்" என்பது திராவிடமாபாடியம்.

(8-சூத். 1-ஆம் அதி.)

முதல்வன் பிரளயாகலர்க்குப் போல நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறு முதலிய உறுப்பிற்றாய் முத்தொழில் நடாத்தி நின்ற தன் இயற்கை வடிவே குரு வடிவாகக்காட்டி முன்னாக நின்று தத்துவ ஞானத்தினை உபதேசித்து உணர்த்தற்கு ஏதுவாம் பெருந்தவமுடையார் என்பார் **தவமுதல்வர் சம்பந்தர்** என்றருளினார் நம் சேக்கிழார் பெருமான்.

'கன்னலங் கழனிக் காழிமா நகரிற் கவுணியனிரண்டு ஞானமுமே, கற்றிடா துணைர வீர்க்கிடை போகாக் கதிர்முலைப் பால்சுரந் தளித்த–அன்னை' என மெய்கண்ட சந்தானத்து உபதேச பரம்பரையில் வந்தார் கூறியதுங் காண்க. இனி விரிப்பிற் பெருகும். வல்லார் வாய்க் கேட்டுணர்க.

உ
சிவமயம்

சைவத் திருமுறைகள்

[வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் அவர்கள், சென்னை.]

(211-ம் பக்கத்தொடர்ச்சி)

திருமுறைகளின் பாகுபாடு

'முறை' என்னுஞ்சொல் பொதுவாகப் புத்தகத்தைக் குறிக்குமேனும், இங்கே 'திரு' என்னும் அடைமொழிபெற்றுவரும் முறை என்னுஞ்சொல் சிறப்பாகத் திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருத்தொண்டர் புராணம் இறுதியாகவுள்ள பன்னிரு திருமுறைகளையே குறிக்கும். இத்திருமுறைகளை இயற்றியவர் ஆளுடைய பிள்ளையார் முதல் சேக்கிழார் இறுதியாகவுள்ள இருபத்தேழு பெரியார். இத்திருமுறையமைப்புக் காலமுறை பற்றியதன்று. பண்டை வழக்காறுபற்றியும், சிறப்புப் பற்றியும் அமைந்துள்ளது. திருமுறை பாடியவர்களுள் காலத்தால் முற்பட்டவர் திருமூலர் (கி. மு. 2550) என்றும், பிற்பட்டவர் சேக்கிழார் (கி. பி. 992—1042) என்றும் திரு. சிதம்பரனார் அவர்கள் கூறுவர். இவ்விருபத்தெழுவர் பாடிய பன்னிரு திருமுறைகளின் பாடற்றொகை சற்று ஏறக்குறைய 18482 ஆகும்.

அபயகுல சேகர சோழ மகாராஜர் நம்பியாண்டார் நம்பிகளின் உதவியால் தில்லையில் ஓர் அறையில் மறைந்திருந்த தேவாரச் சுவடிகளைத் தில்லை மூவாயிரவர் துணைகொண்டு எடுத்து, செல்லரிக்கப்பெற்று அழிந்தன போக எஞ்சிய பதிகங்களுள் சம்பந்தர் பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர் பதிகங்களை 4, 5, 6, ஆம் திருமுறைகளாகவும், சுந்தரர் பாடல்களை 7-ம் திருமுறையாகவும் வகுப்பித்தார். ஆதியில் மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகத் தொகை.

1.	திருஞானசம்பந்தர் பதிகம்	16000
2.	திருநாவுக்கரசர் பதிகம்	49000
3.	சுந்தரர் பதிகம்	38000
	ஆக	103000

இப்போதுள்ள மூவர் திருப்பதிகத்தொகை:-

I.	திருஞானசம்பந்தர் பதிகம்	384
2.	திருநாவுக்கரசர் பதிகம்	312
3.	சுந்தரர் திருப்பதிகம்	100
	ஆக	796

மற்றும் அவ்வரசன் நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டே மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் திருக்கோவையாரை எட்டாந் திருமுறையாகவும்; திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர், நம்பி காடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள் திருவாலியமுதர், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்னும் நாயன்மார் ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டும், அவ்வொன்பதின்மருள்ளே சேந்தனர் அருளிச்செய்த திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்றும் ஆகிய இருபத்தொன்பது திருப்பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும்; திருமூல நாயனர் அருளிச்செய்த திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும்; திருவாலவாயுடையார் சேரமான் பெருமாள் நாயனருக்கு அருளிச்செய்த திருமுகப் பாசுரம் ஒன்றும், காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் இரண்டு திருவிரட்டை மணிமாலை அற்புதத் திருவந்தாதி ஆகிய மூன்றும், ஐயடிகள் காடவர்கோன் நாயனர் திருவெண்பா ஒன்றும், சேரமான் பெருமான் நாயனர் பாடிய பொன் வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா ஆகிய மூன்றும், நக்கீர தேவர்

இயற்றிய கயிலைபாதி காளத்திபாதியந்தாதி, திருவீங்கோய் மலையெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருவகவல், திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் ஆகிய பிரபந்தங்கள் பத்தும், கல்லாடனார் இயற்றிய திருக்கண்ணப்பதேவர் திருமறம் ஒன்றும், கபில தேவர் இயற்றிய மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி ஆகிய மூன்றும், பரணதேவரியற்றிய, சிவபெருமான் திருவந்தாதி ஒன்றும், இளம்பெருமானடிகள் இயற்றிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை ஒன்றும், பட்டினத்துப் பிள்ளையாரியற்றிய கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர்த்தொகை என்னும் பிரபந்தங்கள் ஐந்தும், நம்பியாண்டார்நம்பிகள் இயற்றிய திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவிரட்டைமணிமாலை, கோயிற்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் மீதியற்றிய திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திருஏகாதசமாலை என்னும் பிரபந்தங்கள் பத்தும் ஆகப் பன்னிருவர் அருளிச்செய்த நாற்பது பிரபந்தங்களையும் பதினொராந் திருமுறையாகவும்; சேக்கிழார் பெருமானியற்றிய திருத்தொண்டர் புராணத்தை நம்பியாண்டார் காலத்துக்குப் பின் பன்னிரண்டாந் திருமுறையாகவும் தொகுப்பித்து செப்பேட்டில் எழுதுவித்து கனகசபையிலுள்ள அம்பலக்கூத்தர் சந்நிதியில் ஏற்றுவித்தார்.

திருமுறைகண்ட புராண வரலாற்றில் கால வரையறை தெற்றெனப் புலனாகவில்லை. சரித்திர ஆராய்ச்சியாளர் காலவரையறையில் சற்று முன்

பின்னுக மாறுபடுகின்றனர். அதனுல் பெருந்தீங் கொன்று மில்லை. திருமுறைகளின் உட்பொருளில் கருத்தைச் செலுத்துதலே அறமாம். அடங்கன்முறை ஆராய்ச்சி எழுதிய திரு. அ. சிதம்பரனாரவர்கள் கி. பி. 966—970-ல் அரசாண்ட இரண்டாம் ஆதித்தன் முதல் ஏழு திருமுறைகளைத் தொகுத்தான் என்றும், கி. பி. 970—985-ல் ஆட்சிபுரிந்த உத்தம சோழன் எட்டு முதல் பத்துத் திருமுறைவரை தொகுத்தானென்றும், கி. பி. 985—1012-வரை ஆண்ட முதலாம் இராச ராசன் பதினொராந் திருமுறையை வகுத்தானென்றும், கி. பி. 1012—1042-வரை அரசாண்ட முதலாம் இராசேந்திரன் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாந் திரு முறையாக வகுத்தானென்றும் வரைந்துள்ளார்கள்.

இத்திருமுறைகளின் தொகுப்பை நோக்குமிடத்துக் கடைச்சங்க காலப்பாண்டியர்கள், புலவர் பல்லோர் பல காலத்தில் பாடிய பாடல்களைப் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுப் பித்துக் காத்து வைத்ததுபோல, கி. பி. 7, 8-ஆம் நூற் ருண்டாகிய தேவார காலத்தும், அதற்குமுன்னும் பின்னுந்தோன்றிய சைவசம்பந்தமான இசைத்தமிழ் பாடல்களையும் இயற்றமிழ்ப் பாடல்களையும் சோழ மன்னர்கள் 10, 11-ஆம் நூற்றுண்டுகளில் பன்னிரு திரு முறைகளாகத் தொகை செய்துவைத்துக் காத்தோம் பினர்எனக் கூறுதல் ஏற்புடைத்தாகும். (வரும்)

மும்மலங்களின் குணங்குறிகளை வெவ்வேருகக் கூறு மிடத்து, தன்னைவேறுபடுத்துத் தன்னயம் நாடலும், வேண்டுமென்ருென்றை நினைத்தலும்; ஒன்றைப்பெற விரும்பும் வேட்கையும், ஒன்றைப் பெருமையால் வருஞ் சினமும், தன்னைப் பெரிதாக மதிப்பதால் உளதாகும் செருக்கும், பிறவுயிர்களைக் கொல்லுதலும், தான் துன் புறுதலும், விரும்பியதாய சிறியதொன்று பெற்றகாலைப் பெருமகிழ் வெய்துதலும் ஆகிய எட்டியல்பும் ஆணவத் தின் காரியமா மென்றனை.

—இருபாவிருபஃது.

குருபாதம்

திருவுந்தியார் உரைநடை

[திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், பி. ஏ., எல். டி.]

(181-ம் பக்கத் தொடர்ச்சி)

21, 22, 23 உந்திகள் *

இவற்றான் முதற்பொருள் சகளமாய் வந்துபதேசிக்கக் கேட்டதனைச் சிந்தித்துணருமாறு கூறப்படுகின்றது:-

பொழிப்பு: அருணூல்களுட் சொல்லப்படும் நிலமுதல் நாதமீறாய முப்பத்தாறு முதல்களுமல்லனாய் ஏனைச்சமயத்தவரான் அவர்தம் அறிவு சென்றவளவிற் பேசப்படும் தத்துவங்களும் அல்லனாய் ஆன்ம அறிவின்கண் நீங்காதுளன் அம்பிகைபாகன் என அறிக. (21)

சிற்றின்பங்கருதி உலகப் பொருண்மேற் செல்லும் அவாவினை அறுத்துத் தன்னுணர்வைத் திருவருளினடங்கி நிற்குமாறு நெறிப்படுத்துய்த்தலே பிறவியை வெல்லுதற்கண் ஒருவற்கு வலியாவது; அங்ஙனம் நெறிப்படுத்தாமை பிறப்பிற்கு வித்தாம் என்க. (22)

இதுகாறும் மறைந்துநின்றே உணர்த்திவரும் முதல்வனை மேற்கூறிய நெறியான், ஒருவன் தன்

---

* சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்
கல்லனாய் ஆனானென் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற. 21

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவ தாற்றலென் றுந்தீபற
அல்லாத தல்லலென் றுந்தீபற. 22

கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடும் எளிதாமென் றுந்தீபற. 23

னறிவின்கண் கண்டு கூடவல்லனாயின், அவனுக்குத் இயல்பும் முதல்வனியல்பும் நன்கு விளங்கும். அவன் வீட்டுநெறியை எளிதிற் றலைப்பட்டோனாவன். (23)

குறிப்பு:- இவற்றின் கருத்தைச் சிவஞானபோதம் 9-ம் சூத்திரம் முதல் இரண்டதிகரணப்பொருளோடு ஒத்து நோக்குதல் வேண்டும்.

21-ஆம் உந்தி:- சொல்லும் பொருள்களல்லனாய் ஆனான் என்றது 'நிலமுதல் நாதமீறாக அருணூல்களுட் கூறப்பட்ட தத்துவங்களுள் யான் யாதாகற்பாலன்?' என அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஆய்ந்து, 'இது யான் அல்லேன்; இது யான் அல்லேன், என விட்டு நீங்கி மேற்செல்வுழி அங்ஙனந் தேர்ந்துவருந் தேர்ச்சி யறிவினுள் நின்று துணைசெய்துவரும் திருவருளே பின்னர் வெளிப்பட்டு நின்று தெளிவிக்கும் என்றபடி. ஆனான் = நீங்காதுளான். இதனைச் சிந்தித்தலாமாறு பெறுதும். இனிச் 'சொல்லாதன அல்லனாய்' என்றது 'உலகத்துட் சமயங்களும், சமயநூல்களும், அவற்றுட் கூறப்படும் பொருள்களும் ஒன்றோ டொன்றொவ்வாமல் பலவாக இருத்தலின் அவைபற்றிச் சிந்திக்கப்புகின் முடிவுகாண்பதரிதாகலின் அவைபற்றிச் சிந்தித்தலை ஒழிக' என்றபடி.. பதிஞானத்தை 'அம்பிகைபாகன்' என்றது உபசாரம்.

இவ்வுந்திக்கு இதுவே கருத்தாதலை இதன் பொருளை விளக்க எழுந்த,

" தூல வுடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல வுடம்பா முதனான்கு — மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் துரிசறுப்பார் பார் " (37)

எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவகோட் பாடுடைய
அத்தனையுஞ் சென்றங் களவாதே — சித்தமெனுந்
தூதுதனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார். (38)

என்னுந் திருக்களிற்றுப்படியார் திருவெண்பாக்களான் உணர்க.

ஞானநெறிக்கண், இங்ஙனந் தத்துவங்களைப் படிகளாகக் கொண்டு மேற்சென்று பதிஞானத்தைத் தரிசித்தல்,

முப்பது மாறும் படிமுத்தி யேணியா
ஒப்பிலா வானந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப வரிய சிவங்கண்டு தான்றெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே.

எனவும்,

நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பான மேறி
ஆணையாஞ் சிவத்தைச் சார வணைபவர் போல வையர்
நீணிலை மலையை யேறி நேர்படச் செல்லும் போதில்

எனவும் 10-ம் திருமுறையிலும், 12-ம் திருமுறையிலும் பெறப் படும்.

22-ஆம் உந்தி:— இதனால் நிலமுதல் நாதமீறான பொருள்களி னீங்குதலாவது அவற்றிற் பற்றுச் செய்யாமையே என்பதும், அப்பற்றறுதியே திருவருளையுணர்தற்குச் சாதன மாம் என்பதும் உணர்த்தப்பட்டன. "அசத்தெனப்பட்ட காரிய ரூபப் பிரபஞ்சத்தை அசத்தென்று காண்டலாவது ஆசிரியன் அறிவுறுத்த உபதேசப்பொருளி னுறைத்துநின்று 'அட்டகுண மெட்டுச்சித்தி கோகந்தன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்- வெறுத்து நெறி யறுவகையு மேலொடு கீழடங்க'க் காரண ரூபத்தின் இல்லாமையான் வெறும் பொய்யென நினைந்திருத் தல்" என்னுந் திராவிட மாபாடியம் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. காற்று-உலகப் பொருண்மேற் செல்லும் அவா. கருத்து: முன்னையது ஆன்மாவினுணர்வையும், பின்னையது திருவருளை யும் உணர்த்தும். இதற்குப் பிறவாறுரைத்தல் பொருந்தாமை காண்க.

அரணவுணர்வுதனில், இன்றிங்கசேதனமாம், அணுதி வுனுடைமை என்பன 22, 23-ம் உந்திகளின் பொருள் விளக்கும் திருக்களிற்றுப்படியார் திருவெண்பாக்கள்.

(வரும்)

குருபூசை விழாவும், சித்தியார் வகுப்பும்

——:○:——

ஞானபுரீசுவரர் மகோற்சவ விழா:

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தி லுள்ள ஞானபுரீசுவர சுவாமிக்குச் சென்ற ஆண்டு களிற்போலவே இவ்வாண்டிலும் வைகாசித் திங்கள் இரண்டாம் நாள் (16-5-43) முதல் சாத்திர முறைப்படி துவஜாரோகணம் செய்யப்பட்டு முறையாகப் பத்து நாட்களும் திருவிழா விமரிசையாக நடைபெற்றது. ஏழாந்திருநாள் திருக்கல்யாண மகோற்சவமும், இர தோற்சவமும், தீர்த்தவாரியுற்சவமும், யாவரும் வியப் புறத்தக்கன. ஒவ்வொரு நாட்களில் ஆதீன வித்துவான் களாலும், மற்றும் பல அறிஞர்களாலும் சைவசமயப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. இடையிடையே ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களாலும், ஆதீன ஓதுவாமூர்த்திகளாலும், பிற தமிழ்மறை ஓது கின்றவர்களாலும் தமிழ்வேதபாராயணம் தக்க இன் னிசைக் கருவிகளுடன் நடைபெற்றது. இவ்வுற்சவத் தில் 8-ம் திருநாளன்று இசையரசு, தேவாரமணி திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்களது இசைத் தமிழ்க் கச்சேரி தக்க பக்க வாத்தியங்களுடன் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது.

குருபூசை விழா

25—5—43-ல் குருபூசையன்று மாலை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருக்கூட்டத்தடியார்களும், பல பேரன்பர்களும் புடைசூழச் சிவிகையில் ஆரோ கணித்து வாத்தியங்கள் ஒலிக்கப் பொன்னி நதிக்குச் சென்று திருமஞ்சனமாடி நாட்கடன்களை முடித்துக்

கொண்டு வழியிலுள்ள குருமூர்த்தங்களைத் தரிசனஞ் செய்துகொண்டு மீண்டும் திருமடாலயத்தை யடைந்து கயிலையங்கிரியில் கவினுறவிளங்கும் கண்ணுதற்கடவுள் போன்று வெள்விளக்கின் வெள்ளொளி யினிடையே கொலு வீற்றிருந்து அன்பர்களுக்கு அளித்த காட்சி கண்டோர் மனதில் என்றும் நின்று விளங்குவதாகும். பின்னர் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், ஆவின் பாலைக்கொண்டு ஆக்கிய அக்கார அடிசில் நிவேதனமும் நடந்தன. மறுநாள் 26—5—43 அன்று பகல் மாகேசுர பூசையும் இரவு பட்டினப்பிரவேசமும் சிறப்புற நடந்தன. பட்டினப் பிரவேசக்காட்சியை நேரிற்கண்டு ஆநந்தம் அடையலாமன்றி நாவினால் இத்தகைய சிறப்பிற்று எனக் கூறொணாது. இவ்விருநாட்களிலும் “செவிக்குண வில்லாதபோது சிறிது வயிற்றுக்கு மீயப்படும்” என்ற தமிழ்வேத வாக்கியத்திற்கு ஏற்ப இருவகை உணவினை யும் அன்பர்கள் பலரும் மாறி மாறி உண்டுதிளைத்தனர்.

சைவ மடங்களின் தொண்டு.

பூவிரி பொழில்சூழ் காவிரி வளம் பெறும் சோணாட்டின்கண் திகழும் சைவ மடங்கள் யாவும், சிவத்தையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் சிவ சின்னங்களை யும், திருநெறித் தமிழ் மறைகளையும், யாங்கணுமுள்ள மக்கட்கு அறிவுறுத்தி, வேதநெறி, சைவநெறி, பத்தி நெறிகளையும், தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும் தத்துவனது தாளை வழிபடும் முறைகளாய செந்நெறி களையும் வளர்த்து வந்தன என நூல்கள் வாயிலாகக் கேட்டறிந்தோமன்றி நேரிற்கண்டோர் யாருமிலர். அந்நிகழ்ச்சியை, இதுபோது யாவரும் இப்படி நிகழ்ந் ததென இயம்பவும், நினைக்கவும் இயலுவதாக திருக் கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்தில் 24வது மஹா சந்நிதானமாக எழுந்தருளி அருட்செங்கோல் நடாத்துகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** நடாத்திக் காட்டினார்கள் என்ற இவர்களுடைய செயற்கருஞ்செயல் இந்நாட்டிலுள்ள மக்களாற் போற்றப்பட்டு வருகின்றது என்பது கண் கூடு. இவர்களைச் செற்கருஞ் செயல்கள் செய்யும் தீரர் எனக்கூறல் ஏற்புடைத்தாகும்.

வகுப்பில் நடத்திய நூற்சிறப்பும் பெயரும்.

"முத்தியைப் பெற சித்தியைப் படி" "சிவத்துக்கு மேல் தெய்வமில்லை சித்திக்குமேல் நூலில்லை" என்பன பண்டையோர் வாக்கு. "பாதி விருத்தத்தா லிப்பார் விருத்தமாக வுண்மை, சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவதென்னாளோ?" என்றார் தாயுமானவர். "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர்விருத்தப் பாதி போதும்" என்பது ஸ்ரீமத்குருஞான சம்பந்தரின் அருள்வாக்கு.

பல மதவாதிகளின் கொள்கைகளையெல்லாம், ஏற்ற பல ஏதுக்களை எடுத்துக்காட்டி மறுத்து "சைவசமயமே மெய்ச் சமயம்" "சைவத்தின் மேற் சமயம் வேறிலை, சிவமாம் தெய்வத்தின்மேற் றெய்வமில்லை" என்று சித்தாந்தப்படுத்துவது. மெய்கண்ட சாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரத்தின்கணுள்ள பதினன்கு நூல்களுள் நான்காவதாக விளங்குவது. இத்தகைய சிறப்பிற்றாய சிவஞான சித்தியார் என்னும் அருள் நூலினை இயற்றினர் சகலாகம பண்டிதரென்னும் சிறப்புப் பெயர்பெற்ற அருணந்தி சிவாசாரியர் ஆவர்.

வகுப்பு நடத்திய இடம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்து தமது திருவடிகளிற் பத்தியொடு பணியும் அன்பர்கட்கு அஞ்செழுத்தோதி அங்கையிற் பூதி நல்கும் இடமாகிய பண்டாரக்கட்டு என வழங்கும் இடமாகும். பண்டாரம் என்னும் சொல்லுக்குச் சிவஞானச் சரக்கறை என்று பொருள். இதனை 'அடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' என்ற வாக்கானும் உணரலாகும். ஆதலின் ஞானச்செல்வம் தங்கியிருக்கும் இடம் என்றலே சிறப்புடைத்து.

வகுப்பு நடத்திய காலம்.

24—5—43 முதல் 31—5—43 வரை ஒவ்வொரு நாட்களிலும் காலை 10-மணிக்குத் தொடங்கி 12-மணி வரையிலும், மாலை 5-மணிக்குத் தொடங்கி 8-மணிவரையிலும் ஆகும்.

வகுப்பு நடத்திய ஆசிரியர்.

ஓரும் வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த ஆரா வின்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத்தேனைப் புலவர்கள் பருகும் பொருட்டு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பழனி வேதசிவாகம பாடசாலைப் பேராசிரியர் சிவத்திரு ஈசானசிவாசாரியார் அவர்களைக்கொண்டு சொற்பொழிவு செய்வித்தருளினார்கள்.

பாடங் கேட்டவர்கள்.

இவ்வாதீனத்துத் தம்பிரான் சுவாமிகளும், சோழ பாண்டிய தொண்டை நாடுகளிலிருந்து வந்திருந்த சுமார் 40 புலவர்பெருமக்களும், செல்வர்களும் ஆவார்கள். இவர்கள் யாவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் பீடத்தில் கிழக்கு முகமாக எழுந்தருளியிருக்க, அனைவரும் அடிபணிந்து பூதியேற்றுக்கொண்டு இருபக்கங்களிலும் அமைதியாக இருப்ப, ஈசானசிவாசாரியார் அவர்கள் மகா சந்நிதானத்தின் திருமுன் இருந்து பாடஞ் சொல்லக் கேட்டமுறை மிகப் போற்றுந்தரத்தது. பாடங்கேட்ட ஆண் பெண் மாணவ மாணவிகள் அனைவரும் மகா சந்நிதானத்தின் திருவடியை எழுமை எழுபிறப்பும் இறைஞ்சுவர் என்பது திண்ணம்.

"கரும்புதின்னக் கைக்கூலி கொடுப்பதுபோன்று" புலவர்களை அழைத்து, அவர்கட்கு வேண்டிய உண்டி உறையுள் முதலியன அன்புடன் அளித்து, சாத்திர அறிவு உலகிற் றலையெடுக்க வேண்டுமென்னும் பெருங்கருணையால் சித்தியார்வகுப்பைத் திறம்பெற நடாத்தி அருளிய பெருஞ்செயல் மிகப் போற்றற் குரியதாகும்.

வகுப்பு முடிவுற்ற 31—5—43 அன்று இரவு சித்தியார் வகுப்பிற் பயின்ற மாணவ மாணவிகள் அனைவரும் தங்களது நன்றியறிதலை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சொக்கலிங்கப் பெருமானைத் தரிசனஞ் செய்துகொண்டு ஞானபீடத்தமர்ந்து அடியார்களுக்கும், அன்பர்களுக்கும் திருநீறு வழங்கிய பின்னர் தெரிந்தாணும் நன்றியுரையின்வாயிலாகத் தெரிவித்துக் கொண்டனர். அதுவருமாறு:—

திருநெறி விளக்குஞ் சிவஞான வள்ளால்!

சிவாகமத் திறவாஞ் சிவஞான சித்தியின் செந்நெறி காட்டுந் திருத் தருமையாதீன நந்தா மணிவிளக்கமாக யிலங்கித் தெய்வச் செந்தமிழ் மொழியினையும், சிவநெறியினையும், சைவசமயாசாரிய சந்தானசாரியர்களின் வழியானே நன்கு புரந்தருளித் தண்டமிழ் நாட்டு நன்மக்களை உய்விக்கும் ஒரு பெருங் கருணைக்கு அடியேங்களுடைய எளிய வணக்கம் உரித்தாகுக.

உலகியலுக்கும் மெய்ந்நெறிக்கும் திருக்கோயிற் பூசையும், திருவிழாவும் இன்றியமையாதன என்பதை உலகிற்கு உணர்த்துமாற்றான் மகா சந்நிதானத்தின் திருவருட் பார்வையிலுள்ள திருக்கோயில்கள் பலவும் செவ்விய முறையில் திகழுமாறு திருப்பணி செய்வித்தலோடு அவ்விடங்களில் சிவம்பெருக்குஞ் சொற்பொழிவுகளைத் தக்க அறிஞர்களைக்கொண்டு ஆற்றுவிக்கும் அருட்பெருஞ் செயல்கள் அறப்பெரு நிலயங்கட்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் மிளிர்வனவாம்.

திருவருட்செல்வத்தைப் பெறுவிப்பன சிறந்த நூல்களே யாகலான் அவற்றைப் பலரும் பயின்று பயன் எய்துமாறு ஒப்பற்றதோர் நூல் நிலயத்தினை நிறுவி அதன்கண் தென்மொழி, வடமொழி, ஆங்கிலம் என்றிவற்றில் உள்ள அரிய நூல்கள் பலவற்றையும் அமைத்து அளித்துவரும் அருஞ்செயலுக்குத் தமிழுலகமும் சைவவுலகமும் பெரிதும் கடப்பாடுடையன.

'ஆய்வார் பதிபசுபாசத்தின் உண்மையை' என்றமைக் கிணங்க வேதாகம தமிழ்வேத பாடசாலைகளை நிறுவிப் புரந்து வருவதோடு ஆதீனவெளியீடுகளானும் அறிவுக் கருவூலமாக விளங்கும் ஞானசம்பந்தம் என்னும் திங்கள் வெளியீட்டானும் செல்வர் வறியவர், ஆடவர் மகளிர் எல்லோருடைய உள்ளக்கமலங்களையும் அறியாமைப் பிணிப்பி னீக்கி மலர்வித்து அறிவுமணம் கமழச்செய்து அறிஞராயினர் பலரையும் அகமகிழ் விப்பதொன்று.

ஆளுடைய பிள்ளையார் முதலிய அருளாசிரியன்மார்கள் அருளிச்செய்த அருட்டிருமுறைகளின் பெருமையினையும், அறிவுநூல்களின் பொருளெலாம் அகப்

படுத்து அவற்றின் நெறியெல்லாம் விளங்கும் உயர்சிவ ஞானபோதப் பொருளையும் உலகிற்கு உணர்த்தி உய்விக்க வேண்டுமென எழுந்த பெருங் கருணையால் ஒப்பரு மாநாட்டினைக் கூட்டித் தமிழ் நாட்டிற் சிறந்த புலவர் பலரையுங் கொண்டு விரிவுரைகள் ஆற்றுவித்தும், திருமுறைப்பெருவிழா நடத்தியும், விரிவுரைகளை அச்சிட்டும் உபகரித்த மாபெரும் செயலை என்னென்று மொழியக் கூடும்.

தமிழ்நூற் புலமை மெய்கண்ட நூலறிவானே நிரம்புமாகலின் கற்ற புலவர்களின் பொருட்டு, 'சிவத்துக்கு மேல் தெய்வமில்லை; சித்திக்கு மேல் நூலில்லை' எனப் பாராட்டப்படும் சிவஞான சித்தியாரைப் பாடமுறையில், வடமொழி தென்மொழிப் பயிற்சியும், அருளாசிரியர் திருமொழிகளில் அளப்பரிய அன்பும், சிவாகமசீலமும் நிறைந்து விளங்கும் ஆசிரியரைக் கொண்டு நடத்தி அடியேங்களுக்கு உபகரித்த கைம்மாறற்ற பெருங்கருணைக்கு அடியேங்கள் என்றும் மறவாநன்றியுடையேமா யிருத்தல் கடமையாகும். மகாசந்நிதானத்தின் திருவருட்டுணையால் அடியேங்களுக்கு இச் சிவஞான நூற்கேள்வி உள்ளத்தின்கணின்று பயன்தருவதாகுக.

இவ்வாண்டில் நிகழ்ந்தது போலவே வரும் ஆண்டுகளிலும் எம்மனோர்க்கு மெய்ந்நூற் பொருள்களை உபதேசித்தலும் சிவராஜதானியாகிய இவ்வாதீனத்தின் ஆதரவில் தமிழ்மொழியினை வளர்க்கும் சைவத்தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவுதலும் வேண்டுமென்பது அடியேங்களுடைய தாழ்மையான விண்ணப்பமாகும். கருணைத் தடங்கடலாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அதனை ஏற்று அருள் புரிவதாகுக.

சிவஞான சித்தித் திருநெறியைக் காட்டி
அவஞான நீக்கி யருளும்—தவஞான
நற்றருமை வாழு நவில்சண் முககுருவின்
பொற்கழல்கள் வாழ்க புரிந்து.

இக்கட்டுரை எழுதினோர் சித்தியார்வகுப்பு மாணவர்களுள் ஒருவராகிய நாகை வித்துவான், திரு. வை. மு. சண்முகதேசிகர் அவர்களாவர்.

Pauranic Rudra & Vedic Rudra

The relationship of the Vedic culture to the later culture represented by Hindu Pauranic Sagas has been the subject of profound speculations on the part of the European Scholars who had almost monopolised the scientific study of indian culture and its literature for nearly a century. But the last few years the advent of the Indian Scholars into the field has borne rich fruits in the presentation and interpretation of the ancient data of Indian culture and in removing many of the cobwebs of mistakes and misunderstandings which had unfortunately marred the merits of European Scholarship. This is nowhere better illustrated than in the investigations relating to the character and the so called evolution of the Vedic Rudra-Siva. It had been claimed that the Pauranic Shiva is a non-Aryan and non-Vedic Deity, later admitted, and assimilated into the Hindu religious beliefs, and amalgamated with the Vedic conception of Rudra. The recent investigations of a group of Indian Scholars are helping to explode the myth which had grown round the origin of the mythology of Shiva. Arbman, a German scholar, had claimed that the nature of the post-vedic Rudra is already indicated very clearly in the later Vedic Texts, suggesting that the popular god of the Rig Vedic period was very much the same as the post-Vedic deity, a view contested by Keith. Oldenburg, a great Russian Scholar, had long ago contended that the conception of the god Shiva is really the same

throughout the whole period. Recently, the anxiety to relate the Indus Valley culture to Vedic culture has revived the tendency to derive the Pauranic Shiva from extra-Vedic sources and even some Indian scholors have been led to accept the theory of Sir John Marshall that the picture of Shiva as *Pasu-pati*, 'the Lord of cattle, and as the Yogi *par excellence,* is delineated in the seated form of an Icon occurring in a Mohenjo-Daro Seal, very much discusssd in the course of the recent investigations of scholars. But a sober little study on *Rudra Siva* which we owe to Dr. N. Venkataramanayya, in his Subramanya Aiyar Lectures (1939-40) has brought forth various details and aspects of the Shiva-myth from Rig-Veda itself, the earlist available records of Vedic Culture,- which leave no doubt that the Pauranic Shiva is substantially envisaged in the hymns of the Rig-Veda. Unfortunately, Dr. Venkataramanayya has not emphasized on the valuable data that he has himself dug up in the course of his assiduous researches and has not drawn the conclusions which his data inevitably lead to, namely, that the 'portrait' of Shiva met with in our Pauranic Sagas is clearly reflected in the earliest records of Vedic culture which clearly forbid any further attempt to seek the sources of the Shiva-Myths from extra Vedic sources. That the Pauranic Sagas, and especially the Sectarian Shaiva Puranas emphasize the benign aspects of Rudra-Shiva does not impair the integrity of the complex personality of Shiva already known and reflected in the Rig—Vedic Hymns. Even the malignant or *tamasic* aspects of great personality, His

activities as Cosmic Fire (Agni) or as the Elemental Furies (Rudra) are emphasized in the conception of the Nata-raja the Divine Dancer of Destruction *who destroys in order to build new worlds and Aeons,* represented in a continuous series of images from the beginning of the Gupta Period, if not earlier. But it is necessary to draw attention to the interesting fact that the brilliant episode of 'Siva drinking the poison' an episode bristling with cosmic mystery, and dramatic *rasa* is actually alluded to in the text of the Rig Veda itself. In a very illuminating Hymn in the Rig Veda (10th Mandala 136th Sukta) addressed to a group of Siva Yogins, a band of braided *(Kesinah)* and naked ascetics, 'whose girdle is the wind' *(munayo-vata-rasanah),* it is stated that they have derived their psychic powers by their association with Rudra for 'having drunk from the cub of poison along with Rudra himself' *(Kesi Visasya patrena yad Rudrena pivat saha).* Comment is superfluous: the search for the 'Portrait' of Shiva has indeed ended and let us conclude by echoing the words of Umapati, the author of the 'Fruit of Divine Grace' *"Where the ends there is the abode of the Lord."*

பள்ளித் தமிழாசிரியர் வித்வான், திரு. இரத்தின தேசிகர் அவர்கள் தொண்டின் பெருமை என்பது பற்றியும், குடந்தை லிட்டில் பிளவர் உயர்தரப் பள்ளி ஆசிரியர், திரு. சுந்தரேச செட்டியார் B. A., L. T., அவர்கள் துங்கலியக் கலயர் என்பது பற்றியும் விரிவுரை நிகழ்த்தி ஞர்கள். மறுநாள் 26—5—43 அன்று வித்துவான், திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் இறைவன் இயற்கை அடையாளம் என்பது பற்றியும், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்தரப் பள்ளி ஆசிரியர் திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T., அவர்கள் பொன்வண்ணத் தந்தாதி என்பது பற்றியும், காஞ்சிபுரம் மெய்கண் டார் கழகம் திரு. க. பொன். சண்முகனுர் அவர்கள் அம்பலம் நிறைந்தார் தொண்டர் அறிவதற்கரியார் என்பது பற்றியும், காஞ்சிபுரம் திரு. சண்முக தனலட்சுமி அம்மையார் திருக்குறிப்புத் தொண்டர் என்பது பற்றியும், திருவையாறு அரசர்கல்லூரி வடமொழி ஆசிரியர், பிர்மஸ்ரீ பண்டிட் வைத்தியநாத சாஸ்திரிகள் M. R. A. S., அவர்கள் மாத்ரு பூத சதகம் என்னும் பொருள் பற்றியும் சொற் பொழிவுகள் நிகழ்த்திஞர்கள்.

சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழக உறுப்பினர் சைவத் திருவாளர் C. K. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L., அவர்கள் அன்றைய நிகழ்ச்சிக்கு முடிவுரை கூறி முடித்தார்கள்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரசங்கங்களின் முதலிலும் முடிவிலும் பழனி சிவத்திரு. ஈசான சிவாசாரியார் அவர்கள் முன்னுரை முடிவுரை கூறி வந்திருந்தோ ரனைவரையும் மகிழ்வித்தார்கள்.

ஆச்சாபுரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜஸ்வாமி தேவஸ்தானத் தில் ஞானசம்பந்தப் பெருமான் திருக்கல்யாணத் திருநாளன்று நாகை வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் சிவக்கன்றின் திருமணம் என்னும் பொருள் பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்திஞர்கள்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் சண்முக விலாசப் பிரசாரசபா மண்டபத்தில் மண்டலாபிஷேகக் கிருத்திகைத்

திருநாள் (2—6—43) அன்று சீகாழி லூதரன் மிஷன் ஹைஸ்கூ தமிழாசிரியர் வித்துவான், திரு. D. சுந்தரேச ஆசாரியார் அவர்கள் பக்க வாத்தியங்களுடன் வள்ளி திருமணத்தை கதாகால க்ஷேபமா அனைவரும் பேரானந்தமுற நிகழ்த்தினார்கள்.

திருவாரூர் ஸ்ரீதியாகராஜ சுவாமி தேவஸ்தானம் இராஜாங்க கட்டளையின் சார்பில் தேவாசிரிய மண்டபத்தில் (9—6—43) மாலை நாமகள் நவிற்றியமாமணி என்னும் பொருள்பற்றி சென்னைப் பல்கலைக் கழக உதவித் தமிழாராய்ச்சியாளர், வித்துவான், திரு. முத்து. ச ணிக்கவாசக முதலியார் அவர்கள் அரியதோர் சொற்பெ வாற்றினார்கள்.

உ

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச்சார்பாய் எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் முழு உண்மைகளை உணர்வதற்கும் தமிழறிவைப் பெறுதற்கும் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு (இந்தியா, இலங்கை) அஞ்சற்கூலியுள்பட ரூ. 1—8—0
வெளிநாடு ... ... ரூ. 2—0—0

குறிப்பு:— தனிப்பிரதி கிடையாது. ஓராண்டிற்குக் குறைந்த கையொப்பம் இல்லை.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
ஷண்முகவிலாசம்,
தருமபுரம், மாயவரம்.